# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/31 - 2018 නොවැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.11.15

*2097/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LAND/ACQV1/D3/34.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2016/VE/285.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரனாயக பிரதேச செயலாளர் பிரிவின் கல்பட கோரளை (மேற்கு) சிறு பிரிவு, இல. 44 ஏ, ஹபலக்ககாவ கிராம அலுவலர் பிரிவின், பகுல்வல கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2018.06.11 ஆந் திகதியுடைய ஆ. கி. கே. 3573 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டு இல. 01, 02, 03 மற்றும் 04 எனக் காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பில் ஏறத்தாழ 1.5045 ஹெக்டயார் விஸ்தீரணமான அம்பலன்கொடல்லே வத்த எனும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

**1. துண்டு இல. 01 – காணியின் பெயர் : அம்பலன்கொடல்லே வத்த ; விபரம் : காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது; ஆரம்ப உரிமை கோருவோர் : பகுல்வல, தல்கஸ்பிடிய, அரனாயகவில் வசிக்கும் எச். எம். ஜகத் பண்டார ஹேரத், எம். ஏ. விமலாவதி முனவீர, எம். ஏ. வசந்த முனவீர மற்றும் ஏனையோர், காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக (ச. மி. 823); விஸ்தீரணம் : 0.0823 ஹெக்டயார்**

வடக்கு : அம்பலன்கொடல்லே வத்த மற்றும் ஆடி அருவி ; கிழக்கு : ஆடி அருவி ; தெற்கு : பாதை ; மேற்கு : அம்பலன்கொடல்லே வத்த.

**2. துண்டு இல. 02 – காணியின் பெயர் : அம்பலன்கொடல்லே வத்த ; விபரம் : காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது; ஆரம்ப உரிமை கோருவோர் : பகுல்வல, தல்கஸ்பிடிய, அரனாயகவில் வசிக்கும் எச். எம். ஜகத் பண்டார ஹேரத், எம். ஏ. விமலாவதி முனவீர, எம். ஏ. வசந்த முனவீர மற்றும் ஏனையோர், காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம் : 0.1434 ஹெக்டயார்**

வடக்கு : பாதை ; கிழக்கு : பாதை மற்றும் 4 ஆவது காணித் துண்டு; தெற்கு : 4 ஆவது காணித் துண்டு ; மேற்கு : அம்பலன்கொடல்லே வத்த.

**3. துண்டு இல. 03 – காணியின் பெயர் : அம்பலன்கொடல்லே வத்த ; விபரம் : காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது; ஆரம்ப உரிமை கோருவோர் :**

**பகுல்வல, தல்கஸ்பிடிய, அரனாயகவில் வசிக்கும் எச். எம். ஜகத் பண்டார ஹேரத், எம். ஏ. விமலாவதி முனவீர, எம். ஏ. வசந்த முனவீர மற்றும் ஏனையோர், காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம் : 0.1654 ஹெக்டயார்**

வடக்கு : அம்பலன்கொடல்லே வத்த ; கிழக்கு : அம்பலன்கொடல்லே வத்த மற்றும் மில்லன்கஹமுலதெனிய; தெற்கு : மில்லன்கஹதெனிய மற்றும் பாதை; மேற்கு : பாதை.

*4.* **துண்டு இல. *04* – காணியின் பெயர் : அம்பலன்கொடல்லே வத்த ; விபரம் : காணி எடுத்தல் சட்டத்தின் *38* (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது; ஆரம்ப உரிமை கோருவோர் : பகுல்வல, தல்கஸ்பிடிய, அரனாயகவில் வசிக்கும் எச். எம். ஜகத் பண்டார ஹேரத், எம். ஏ. விமலாவதி முனவீர, எம். ஏ. வசந்த முனவீர மற்றும் ஏனையோர், காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம் : *1.1134* ஹெக்டயார்**

வடக்கு : கனிதெனிய, அம்பலன்கொடல்லே வத்த, 2 ஆவது காணித் துண்டு மற்றும் பாதை ; கிழக்கு : பாதை மற்றும் அல்ஹேன; தெற்கு : அல்ஹேன, அலுத்துரையலாஹெஹேன மற்றும் கொபேகடுவ ; மேற்கு : கொபேகடுவ மற்றும் கனிதெனிய.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக *2018* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *13* ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு அரனாயக பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் *2018* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *06* ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரனாயக.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அரனாயக,
*2018*, நவெம்பர் *13*.

*11 - 1289*

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: பா/ஒ/2/அதி/I-IV.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 1999/UDA/443.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை *1964* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

*2001 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 08 ஆந் திகதிய இல. 1248/18 உடைய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2004.08.02 ஆந் திகதிய 1352/12 மற்றும் 2018, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதிய இல. 2065/4 இனைக் கொண்ட வர்த்மான பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்பட இல. 8526 இல் 1 முதல் 16 வரையிலான காணித்துண்டுகளில் ஒன்றான பின்வரும் காணியானது :*

**துண்டு இல. *04***
காணியின் பெயர்: கனேவிலகும்புற ; விபரம்: வயல் காணி; உரிமை கோருபவர்: எம். எம். லென்சி நோனா; விஸ்தீரணம் : 0.0160 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக *2018* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *24* ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு பாதுக்க பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் *2018* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *17* ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். நந்தசேன,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அலுவலர்,
பாதுக்க.

பிரதேச செயலகம்,
பாதுக்க,
*2018*, நவெம்பர் *13*.

*11 - 1290*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.